பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
15 07 2025 **TUESDAY 6.30 PM**
மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட நான்கு பேர் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியுள்ளனர்.

- சுபான்ஷு சுக்லா தமது விடா முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின்மூலம் நாட்டு மக்களின் கனவுகளை நனவாக்கியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பர்கூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதிகளில் வசித்துவரும் மலையாளி இன மக்களை, பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்து திமுக அரசு முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

- தமிழகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ், 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

- விவசாயிகள் நலனுக்காக அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட நான்கு பேர் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பியுள்ளனர்.

Axiom-4 திட்டத்தின்கீழ், Space X Dragon விண்கலம் மூலம் விண்வெளிக்கு சென்ற அவர்கள், இந்திய நேரப்படி மாலை 3 மணியளவில் கலிபோர்னியா அருகே பசிபிக் கடல் பகுதியில் பத்திரமாக இறங்கினர்.

அங்கிருந்த மீட்பு கப்பல் மூலம் அவர்கள் அழைத்து வரப்பட்டு, விண்கலத்தில் இருந்து பத்திரமாக வெளியே கொண்டுவரப்பட்டனர்.

சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட நான்கு பேரும் பாதுகாப்பாக இருப்பதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

நான்கு பேரும் ஏழு நாள் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்படுவார்கள்.

<<<<<<>>>>>

சுபான்ஷு சுக்லா தமது விடா முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின்மூலம் நாட்டு மக்களின் கனவுகளை நனவாக்கியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து வெற்றிகரமாக திரும்பியுள்ள சுபான்ஷு சுக்லாவுக்கு பாராட்டு தெரிவித்துள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு சென்ற முதல் இந்திய வீரரான சுபான்ஷு சுக்லாவை நாட்டு மக்களுடன் இணைந்து தாமும் வரவேற்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனித விண்வெளி பயணமான ககன்யான் திட்டத்திற்கு இது முன்னோடியாக அமையும் என்றும் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

பர்கூர் மற்றும் கடம்பூர் மலைப்பகுதிகளில் வசித்துவரும் 30 ஆயிரம் மலையாளி இன மக்களை, பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது குறித்து திமுக அரசு முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் கடம்பூர் மலைப்பகுதியில் இது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், இக்கோரிக்கையை நிறைவேற்ற மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக தெரிவித்தார்.

*(Voice Byte – எல். முருகன் -65 Sec.)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ், 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட உள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவருமான இளையபெருமாள் சிலையை கடலூர் மாவட்டம் மல்லபுரத்தில் இன்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய முதலமைச்சர், மக்களின் குறைகளை தீர்க்க மாநில அரசு முன்னுரிமை அளித்து செயல்படுவதாக கூறினார்.

ஏற்கனவே, மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ், ஐந்தாயிரம் முகாம்களை நடத்தி ஏராளமான மனுக்களுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின்கீழ், அரசின் 46 சேவைகள் தொடர்பாக மக்கள் விண்ணப்பங்களை வழங்கலாம் என்று திரு மு.க.ஸ்டாலின் கூறினார்.

<<<<<<>>>>>

அரசு கலை அறிவியல் கல்லூரிகளில், முதுநிலை பாடப்பிரிவுகளில் மாணவர் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப்பதிவு வரும் 31-ஆம்தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, உயர்கல்வித்துறை அமைச்சர் திரு கோவி. செழியன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இன்றுடன் கால அவகாசம் முடிவடையவிருந்த நிலையில், மாணவர்களின் நலன்கருதி அது நீட்டிக்கப்பட்டுள்ளதாக கூறியுள்ளார்.

ஆகஸ்ட் நான்காம் தேதி தரவரிசைப்பட்டியல் வெளியிடப்படும் என்றும், 11-ஆம் தேதி கலந்தாய்வு நடைபெறும் என்றும், 20-ஆம் தேதி வகுப்புகள் தொடங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

விவசாயிகள் நலனுக்காக அறிவிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அரியலூரில் விவசாயிகளுடன் கலந்துரையாடிய அவர், முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் விவசாயிகள் நலனுக்காக செயல்படுத்தப்பட்ட திட்டங்களை தற்போதைய அரசு கைவிட்டுள்ளதாக கூறினார்.

தேர்தல் வாக்குறுதியில் அறிவிக்கப்பட்டபடி, கரும்புக்கான கொள்முதல் விலையை நான்காயிரம் ரூபாயாக திமுக அரசு உயர்த்தவில்லை என்றும், இதேபோல், நெல்லுக்கான கொள்முதல் விலையையும் மாநில அரசு உயர்த்தவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் அஇஅதிமுக வெற்றிபெற்று ஆட்சி அமைத்தால், விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்று திரு எடப்பாடி பழனிசாமி உறுதியளித்தார்.

<<<<<<>>>>>

பணி நிரந்தரம் கோரி போராடிவரும் பகுதிநேர ஆசிரியர்களின் கோரிக்கைகளை மாநில அரசு நிறைவேற்ற வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், பணிநிரந்தரம் தொடர்பாக, திமுக-வின் தேர்தல் வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆசிரியர்களின் போராட்டத்தின்போது, அது தொடர்பாக செய்தி சேகரித்த செய்தியாளர்கள் மீது காவல்துறையினர் அத்துமீறலில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

கோரிக்கைகளை நிறைவேற்றாததோடு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்து வழக்கு பதிவு செய்திருப்பது கண்டனத்திற்குரியது என்றும் திரு நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

கேரளாவில் நிஃபா வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதையடுத்து, கோவை மாவட்டத்தில் கேரள எல்லைப்பகுதியில் தமிழக சுகாதாரத்துறை கண்காணிப்பை தீவிரப்படுத்தியுள்ளது.

கேரளாவிலிருந்து தமிழகம் வரும் பயணிகளுக்கு காய்ச்சல் பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte - ஹரிஹரன் - 48 Sec.)*

<<<<<<>>>>>

தமிழகத்தின் ஓரிரு இடங்களில் இன்று லேசானது முதல், மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், நீலகிரி மற்றும் கோவை மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக கூறினார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான கணக்கெடுப்புப்பணி செப்டம்பர் மாத இறுதிக்குள் நிறைவடையும் என்று ஆட்சியர் திருமதி அருணா கூறியுள்ளார்.

------------------

சேலம் மாநகர காவல் ஆணையராக திரு அனில் குமார் கிரி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

----------------

ஒகேனக்கல் அருவிகளில் கடந்த 20 நாட்களாக சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டு, அருவிகளில் குளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திரு சதீஷ் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் 'Ishaque Eqbal ' காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

-----------

சென்னையில் நடைபெற்றுவரும் முருகப்பா கோப்பை ஹாக்கிப்போட்டியின் இன்றைய ஆட்டத்தில் தமிழ்நாடு அணி – ரயில்வே அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<END>>>>>